SRI LANKA

இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் II பரீட்சை – ஜூலை 2025

**(Level II Examination – July 2025)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்ள

## (203) வியாபாரச் சட்டம் (BLA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்கள் கழகம்**

இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நாகிமி மாவத்தை,

நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05

தொ.பே - 011 2 559 669

கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு

# இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் II பரீட்சை – ஜூலை 2025

## (203) வியாபாரச் சட்டம்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

### *வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

**1.1** (2)

**1.2** (4)

**1.3** (2)

**1.4** (2)

**1.5** (2)

**1.6** (3)

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்,)*

*(12 புள்ளிகள்)*

**1.7** சரியானது

**1.8** தவறானது

**1.9** தவறானது

*(ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளிகள்,)*

*(03 புள்ளிகள்)*

SRI LANKA

**1.10** *பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு*

- சுமைச்சீட்டு (வார்நாமம்)
- விற்பனைப்பட்டியல்
- காப்புறுதிச் சான்றிதழ்
- ஒப்பந்தத்துடன் தொடர்புடைய பிற ஆவணங்கள் (சுகாதாரச் சான்றிதழ்கள், மூலச் சான்றிதழ்கள், எடை அல்லது நிபந்தனைச் சான்றிதழ்கள், தரச் சான்றிதழ்கள்)

**1.11** பணத் தூய்மையாக்கல் மோசடியை எதிர்த்துப் போராடவும் அதனை தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

**1.12** கட்டளைக்கு செலுத்த வேண்டிய பட்டியல் ஒன்றினை கைமாற்றத்தக்க அந்தஸ்துக்கு மாற்றுவதற்கு, பரிமாற்று உண்டியலானது புறக்குறிப்பிடப்படுதல் வேண்டும். புறக்குறிப்பிடல் என்பது மாற்றப்படுனர் ஒருவர் பரிமாற்று உண்டியலின் பின்புறத்தில் தனது பெயரில் கையொப்பமிடும் செயலைக் குறிக்கும்.

**1.13** பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு போதுமானது

- திட்ட முன்மொழிவுகள் குறித்து முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துதல்
- தன்னார்வத் திட்டங்களை ஏற்றுக்கொண்டு மதிப்பாய்வு செய்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க அந்தந்த அரசு நிறுவனங்களுக்கு அனுப்புதல்.
- சிறப்பு ஆலோசனை உதவி வழங்குதல் மற்றும் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரித்தல்
- வரி மற்றும் பிற நிவாரணங்களை வழங்குதல்
- எதிர்கால முதலீட்டாளர்களுக்கு உட்கட்டமைப்பு திட்டங்களை சந்தைப்படுத்துதல்

**1.14** பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டு

- வாக்குறுதிச் சீட்டு
- பரிமாற்று உண்டியல்
- காசோலை
- வங்கி குறிப்பு
- பங்கிலாப ஆணைச்சீட்டு
- திறைசேரி உண்டியல்
- காவித் தொகுதிக்கடன்

*(ஒவ்வொன்றுக்கும் 2 புள்ளிகள்)*

*(10 புள்ளிகள்)*

*(25 புள்ளிகள்)*

aat SRI LANKA

***A பகுதி முடிவு***

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 04 – முகவராண்மைச் சட்டம்***

**(a)**

முகவராண்மைச் சட்டத்தின் கீழ் ஷாமா செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மினுகி கட்டுப்பட்டவரா என்பதைத் தீர்மானிப்பதற்காக, முகவராண்மைச் சட்டத்தின் முக்கிய கொள்கைகளைப் பயன்படுத்தி, குறிப்பாக உண்மையான அதிகாரம், முகவரின் கடமைகள் மற்றும் முதல்வரின் பொறுப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி நிலைமையை பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

முகவராண்மைச் சட்டத்தின் கீழ், முகவருக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் ஒரு முகவர் செய்யும் செயல்களுக்கு மட்டுமே ஒரு முதல்வர் பொறுப்பேற்க முடியும். அதிகாரம் மூன்று வடிவங்களில் எழலாம்: வெளிப்படையாக, உட்கிடையாக மற்றும் தோற்றப்பாடான அதிகாரம் என்பனவாகும். இந்த சூழ்நிலை பிரதானமாக வெளிப்படையான அதிகாரத்தைப் பற்றியதாகும்.

இந்த வழக்கில், மினுகி வெளிப்படையாக ஷாமாவை தனது முகவராக நியமித்து, அவருக்கு பின்வருவனவற்றுக்கான அதிகாரங்களை வழங்கியுள்ளார்:

- மீள்விற்பனை நோக்கங்களுக்காக மின்னணு உபகரணங்களை வாங்குவதற்கான ஒப்பந்தங்களை பேரம் பேசுதல்.
- மினுகியின் சார்பாக ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல்.

எனவே, வழங்குநருடன் ஒப்பந்தம் செய்தபோது ஷாமா தனது வெளிப்படையானஅதிகாரத்திற்குள் செயற்பட்டார். விலை அல்லது விபரங்களைப் பற்றி மினுகிக்குத் தெரிவிக்கத் தவறியது, அவர் தனது அதிகார வரம்பிற்கு அப்பால் செயற்படவில்லை என்பதன் காரணமாக பரிமாற்றத்தை செல்லுபடியற்றதாக ஆக்கிவிடாது. எனவே, ஷாமா தனக்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குள் செயற்பட்டதால் மினுகி ஒப்பந்தத்திற்குக் கட்டுப்படுகிறார்.

***(04 புள்ளிகள்)***

**(b)**

ஷாமா தனது வெளிப்படை அதிகாரத்திற்குள் செயற்பட்டிருப்பதால், ஷாமா ஒப்பமிட்ட ஒப்பந்தத்திற்கு மினுகி கட்டுப்பட்டிருந்தாலும், எந்தவொரு கடமை மீறலுக்காகவும் ஷாமாவுக்கு எதிராக நிவாரணத்தைக் கோர மினுகி முயற்சிப்பதை இது தடுக்காது. முகவராண்மைச் சட்டத்தின் கீழ், ஒரு முகவர் தனது முதல்வருக்கான பல கடமைகளைக் கொண்டிருப்பதுடன், இந்தக் கடமைகளை மீறுவது முதல்வருக்கு சட்டப்பூர்வ நிவாரணங்களைப் பெறுவதற்கான உரிமையை அளிக்கலாம்.

முகவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாவதுடன், நன்நோக்கம், விசுவாசம் உடையவர்களாக, முதல்வரின் சிறந்த நலன்களுக்காக செயற்பட வேண்டும். ஒப்பந்தத்தின் விதிமுறைகள் அல்லது

வழக்கத்திற்கு மாறான அதிக விலை போன்ற முக்கிய தரவுகளை வெளப்படுத்தத் தவறுவது நம்பகக் கடமையை மீறுவதாக இருக்கலாம்.

இதே போன்ற சூழ்நிலைகளில் ஒரு நியாயமான நபரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நியம கவனம் மற்றும் திறனுடன் ஒரு முகவர் தனது செயற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஷாமா, மினுகிக்குத் தெரிவிக்காமல் சந்தை விலையை விட கணிசமாக அதிக விலைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்ததில், அலட்சியமாகவோ அல்லது சந்தை விழிப்புணர்வு இல்லாமல் செயல்படுவதன் மூலமாகவோ இந்தக் கடமையை மீறியிருக்கலாம்.

**வழக்குச் சட்டம்: டர்பின் எதிர் பில்டன்**

அறிவுறுத்தப்பட்டபடி பொருட்களை காப்புறுதி செய்யத் தவறியதற்காக முகவர் பொறுப்புடையவராக இனங்காணப்பட்டார். நியாயமான முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவது முகவரின் கடமை, அவ்வாறு செய்யத் தவறினால் முகவர் இழப்புக்களுக்குப் பொறுப்பாவார் என்பதை நீதிமன்றம் வலியுறுத்தியது.

ஷாமாவின் வழக்கில், பரிவர்த்தனையில் விவேகத்துடன் செயற்படத் தவறியதால், முதல்வருக்கு எதிர்பார்க்கக்கூடிய நிதி இழப்பு ஏற்பட்டது. எனவே, ஏற்பட்ட இழப்புக்கான இழப்பீட்டை மீட்டெடுக்க மினுகிக்கு உரிமை உண்டு.

***(06 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 07 – தொழிற் சட்டம்***

**(a)** 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ், இந்தச் சட்டத்தின் கீழ் வெளிப்படையாக விலக்கப்படாத ஒவ்வொரு ஊழியரும், அதே தொழில்தருனருடன் குறைந்தபட்சம் ஐந்து (5) ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை முடித்திருந்தால் பணிநீக்கம் செய்யப்பட்டவுடன் பணிகொடையினை பெற உரிமை உண்டு

பின்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்தி பணிக்கொடை அளவு கணக்கிடப்படுகிறது:

**பணிக்கொடை= 1/2* கடைசி மாத சம்பளம் * நிறைவு செய்யப்பட்ட சேவை ஆண்டுகளின் எண்ணிக்கை**

இந்த வழக்கில், ஆன் என்பவர் ஏப்ரல் 01, 2016 அன்று நிறுவனத்தில் இணைந்து 30 ஜூன் 2025 அன்று விலகினார், ஆகவே 9 முழு ஆண்டுகள் தொடர்ச்சியான சேவையை முடித்தார். அவர் கடைசியாகப் பெற்ற மாதச் சம்பளம் ரூ. 300,000 ஆகும்.

**பணிக்கொடை = 1/2* 300,000* 9= 150,000 * 9 = ரூபா 1,350,000**

அதன்படி, ஆன் தனது வேலையை விட்டு விலகியவுடன் தனது தொழில் தருனரிடமிருந்து ரூ. 1,350,000 பணிகொடைத்தொகையினைப் பெற உரிமை உண்டு.

***(04 புள்ளிகள்)***

**(b)**

- வாராந்த விடுமுறை நாட்கள்
- வருடாந்த விடுமுறை
- சாதாரண விடுமுறை
- பொது விடுமுறை நாட்கள்
- பூரணைதின விடுமுறை நாட்கள்
- மகப்பேற்று விடுமுறை

***(மூன்று விடுமுறைகளை மாத்திரம் எதிர்பார்க்கவும்)***

***(03 புள்ளிகள்)***

**(c)**

- பாகுபாடுகளிலிருந்து விடுபட்டிருக்கும் உரிமை
- விரும்பிய தொழில் அல்லது உத்தியோகத்தில் ஈடுபடும் உரிமை
- சம ஊதியம் மற்றும் நியாயமாகக் கையாளப்படுவதற்கான உரிமை
- நியாயமான மற்றும் பாதுகாப்பான வேலை நிபந்தனைகளுக்கான உரிமை
- ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம் பேசும் உரிமை
- தனியுரிமைக்கான உரிமை
- தொழிற்சங்கங்களில் சேரும் உரிமை
- விடுமுறை பெறும் உரிமை
- செய்யப்படும் பணிக்கான கொடுப்பனவைப் பெறும் உரிமை

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

**அத்தியாயம் 08 – காப்புறுதிச் சட்டம், வாடகைக் கொள்வனவு மற்றும் குத்தகை எண்ணக்கருக்கள்**

**(a)**

செக்யூர் இன்சூரன்ஸ் லிமிடெட்டிலிருந்து சமந்தா தனது காப்புறுதிக் கோரலைப் பெற்றுக்கொள்ளும் இயலுமையானது, காப்புறுதி ஒப்பந்தங்களை ஆளுகை செய்யும் உச்ச நன்னம்பிக்கைக் கோட்பாட்டில் சார்ந்துள்ளது. இந்தக் கோட்பாட்டின் கீழ், காப்புறுதி வழங்குனர் இடரை ஏற்பது அல்லது நிராகரிப்பது தொடர்பான தீர்மானத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடிய அனைத்து முக்கிய உண்மைகளையும் முழுமையாகவும் உண்மையாகவும் வெளியிட வேண்டும் என்பது கட்டாயமானதாகும். ஒரு தவறான விளக்கம் கொடுக்கப்பட்டாலும் கூட, அது அப்பாவித்தனமாக செய்யப்பட்டிருந்தாலும் கூட, காப்புறுதி வழங்குனர் ஒப்பந்தத்தைத் தவிர்க்க உரிமை அளிக்கப்படலாம்.

**O'Conner v. BDB Kirby & Co** வழக்கில், காப்புறுதி செய்யப்பட்ட O'Conner காப்புறுதி விண்ணப்பத்தில் தனது காரை ஒரு மோட்டார் வாகன தரிப்பிடத்தினுள் (Garage) நிறுத்தியதாக தவறாகக் குறிப்பிட்டுள்ளார், ஆனால் உண்மையில் அவர் அதை தெருவில் தான் நிறுத்தினார். பின்னர் கார் சேதமடைந்தபோது, வாகனம் எங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது என்பது குறித்த தவறான (பிறழ்பகர்வு) விளக்கம் கொடுக்கப்பட்டது ஒரு பொருண்மையான தவறான பிரதிநிதித்துவம் (பிறழ்பகர்வு) என்றும், காப்புறுதி கொள்கையின் கீழ் பணம் செலுத்துவதை

மறுக்க காப்புறுதி வழங்குனருக்கு உரிமை உண்டு என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

சமந்தாவின் வழக்கிலும் இதே கொள்கையைப் பயன்படுத்திய அவர், காப்புறுதி விண்ணப்பத்தில் அவரது கடையில் பாவனையிலுள்ள சிசிடிவி முறைமை இருப்பதாகக் குறிப்பிட்டார். இருப்பினும், அந்த முறைமை மூன்று மாதங்களுக்கும் மேலாக செயற்படாதிருந்துள்ளதுடன், அவர் அதைச் சரிபார்க்கவோ அல்லது திருத்தங்களை மேற்கொள்ளவோ இல்லை. தவறான நம்பிக்கையின் கீழ் கூறப்பட்ட இந்தத் தவறான கூற்று (பிறழ்பகர்வு) காப்புறுதி தருனரின் காப்புறுதி வழங்குவதற்கான விருப்பத்தைப் பாதிக்கக்கூடிய அல்லது கொள்கையின் விதிமுறைகளை பாதிக்கக்கூடிய ஒரு முக்கிய உண்மையுடன் தொடர்புடையது. **O'Conner v. BDB Kirby & Co** வழக்கைப் போலவே, நீதிமன்றம் சமந்தாவின் பதிலைத் தவறான விளக்கமாகக் கருதி, காப்பீட்டாளருக்கு கோரிக்கையை நிராகரிப்பதற்கான காரணங்களை வழங்கும்.

எனவே, பிறழ்பகர்வு சட்டம் மற்றும் உச்ச நன்னம்பிக்கைக் கோட்பாட்டின் அடிப்படையில், சமந்தா தனது காப்புறுதி கோரிக்கையை மீட்டெடுக்க முடியாமல் போகலாம், ஏனெனில் அவரது தவறான அறிக்கை ஒப்பந்தத்தில் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

***(04 புள்ளிகள்)***

**(b)**

காப்புறுதி நிறுவனம் காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு ஏற்பட்ட சேதத்திற்கான இழப்பீட்டை வழங்கியவுடன், காப்புறுதி பெறுனர் வெளிப்புறக் கட்சிகளிடமிருந்து பெறக்கூடிய பிற நன்மைகள் மற்றும் உரிமைகளை காப்புறுதி தருனருக்கு மாற்றுவது பதிலாள்வைப்புக் கோட்பாடு என்று அழைக்கப்படுகிறது. இழப்பீட்டு கொள்கையின் விளைவாக இந்தக் கருத்து எழுகிறது.

உதாரணமாக, X என்பவர் பொருட்களுக்கு தீ அபாயக் காப்புறுதியைப் பெற்று, அதன் பிறகு, Y இன் அலட்சியம் காரணமாக பொருட்கள் தீயில் எரிந்து சேதமடைந்தால், X என்பவருக்கு காப்புறுதி நிறுவனத்தால் காப்புறுதி செலுத்தப்படும்போது, Y மீது வழக்குத் தொடரும் உரிமை இப்போது X இடமிருந்து பதிலாள்வைப்புக் கோட்பாட்டின் கீழ் காப்புறுதி நிறுவனத்திற்கு செல்கிறது.

பதிலாள்வைப்புக் கோட்பாடு ஆயுள் மற்றும் விபத்துப் காப்புறுதிகளுக்குப் பிரயோகமாகாது.

***(03 புள்ளிகள்)***

**(c)**

- சட்டப்பூர்வ கடப்பாட்டினை உருவாக்கும் எண்ணம்
- காப்புறுதி கொடைமுனைவு அல்லது முன்மொழிவு
- ஏற்றுக்கொள்ளல்
- சட்டபூர்வ செல்லுபடியாகும் தன்மை
- தகுதிவாய்ந்த தரப்பினர்
- பிரதிபயன்

***(மூன்று கூறுகளை மாத்திரம் எதிர்பார்க்கவும்)***

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

aat SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

| *அத்தியாயம் 06 – கம்பனிச் சட்டம்* |
|---|

**(a)**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தனியான சட்ட ஆளுமை கோட்பாடானது, ஒரு கம்பனி அதன் பங்குதாரர்கள் மற்றும் இயக்குநர்களிடமிருந்து தனித்துவமான சட்ட நிறுவனம் என்பதைக் குறிக்கிறது. அது சொத்துக்களை தன் பெயரில் வைத்திருக்கலாம், அவற்றிற்காக வழக்காடலாம் மற்றும் வழக்குத் தொடரப்படலாம், ஒப்பந்தங்களில் நுழையலாம் மற்றும் அதன் சொந்த பெயரில் கடன்களைப் பெறலாம். கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 87 இன் கீழ், பங்குதாரர்கள் பங்குதாரர்களாக இருக்கின்ற காரணத்தினால் மாத்திரம் நிறுவனத்தின் செயல்கள், தவறுகள் அல்லது கடமைகளுக்கு பொறுப்பேற்க மாட்டார்கள்.

இந்தக் கோட்பாடு **சாலமன் எதிர் ஏ. சாலமன் & கோ. லிமிடெட்** வழக்கில் உறுதியாக நிலைநாட்டப்பட்டது, அதில் நீதிமன்றம் திரு. சாலமன் நிறுவனத்தின் ஒரே பங்குதாரராகவும் கட்டுப்பாட்டாளராகவும் இருந்தபோதிலும், நிறுவனம் ஒரு தனி சட்டப்பூர்வ நிறுவனமாகும், மேலும் அதன் கடன்கள் அவரது தனிப்பட்ட கடன்கள் அல்ல என்று தீர்ப்பளித்தது.

**DFCC வங்கி லிமிடெட் எதிர் முதித பெரேரா** என்ற இலங்கையில் இடம்பெற்ற வழக்கும் அதே கோட்பாட்டைப் பயன்படுத்தியது, நிறுவனத்தின் பொறுப்புகள் அதன் இயக்குநர்களின் பொறுப்புகளிலிருந்து வேறுபட்டவை என்பதால், நிறுவனம் பெற்ற கடன்களுக்கான பிணையமாக தனது சொத்தை அடமானம் வைத்த இயக்குநருக்கு எதிராக சொத்து கையகப்படுத்தல் ஆணை நிறைவேற்றம் செய்ய முடியாது என்று கூறியது.

அதன்படி, இந்த வழக்கில், XYZ (பிரைவேட்) லிமிடெட் ஒரு தனியான சட்ட ஆளுமையுள்ள கம்பனியாக இருப்பதுடன், தனிப்பட்ட உத்தரவாதம் அல்லது மோசடிக்கான எந்த ஆதாரமும் இல்லாததால், அமரா நிறுவனத்தின் கடன்களுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க தேவை இல்லை. ஆகவே இந்த கடன்களை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு நிறுவனத்திடம் மட்டுமே உள்ளது.

*(04 புள்ளிகள்)*

**(b)**

- உறுப்பினர்களின் பதிவேடு - பங்குதாரர்களின் விவரங்கள், பங்குகள், இடமாற்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல்கள்.
- இயக்குநர்கள் மற்றும் செயலாளர்களின் பதிவேடு - இயக்குநர்கள் மற்றும் நிறுவனச் செயலாளரின் பெயர்கள், முகவரிகள், நியமனம் மற்றும் விலகல் திகதிகள்.
- சாட்டுதல்கள் பதிவேடு - நிறுவன சொத்துக்கள் மீது உருவாக்கப்பட்ட சாட்டுதல்கள் அல்லது அடமானங்களின் விவரங்கள்.
- அக்கறைநலன் பதிவேடு - பங்குகள், தொகுதிக்கடன்கள், ஒப்பந்தங்கள், அல்லது நிறுவனத்துடனான முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் இயக்குநர்கள் தங்கள் அக்கறைநலன்கள் பற்றிய வெளிப்படுத்தல்கள்.
- ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் மற்றும் இயக்குநர்களின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் உட்பட அனைத்து கூட்டங்களின் அறிக்கைகள்.

aat SRI LANKA

- பங்குப் பதிவேடு
- இயக்குநர்கள் மற்றும் செயலாளர்களின் வருகையைக் கண்காணிக்க பதிவு செய்யவும் பதிவேடு

***(மூன்று ஏடுகளை மாத்திரம் எதிர்பார்க்கவும்)***

***(03 புள்ளிகள்)***

**(c)**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் கீழ், முந்தைய சட்டத்திலிருந்து ஒரு கணிசமான மாற்றமாக, அமைப்பு அகவிதிகளில் நிறுவனங்களின் குறிக்கோள் வாசகப் பிரிவு தொடர்பாக வழங்கப்பட்ட நெகிழ்வுத்தன்மை ஆகும். பழைய சட்டத்தின் கீழ், குறிக்கோள் வாசகங்களைச் சேர்ப்பது கட்டாயமாக இருந்ததுடன், நிறுவனம் வலுவிழந்த அதிகாரக் கோட்பாட்டின் கீழ் கூறப்பட்ட நோக்கங்களுக்குள் மட்டுமே செயற்பட முடியும். இருப்பினும், 2007 சட்டம் குறிக்கோள் வாசகங்களைச் சேர்ப்பதை விருப்பத்திற்குரியதாக ஆக்குகிறது. எந்த குறிக்கோள் வாசகங்களும் சேர்க்கப்படவில்லை என்றால், நிறுவனம் எந்தவொரு சட்டப்பூர்வமான வணிகத்திலும் ஈடுபடலாம்.

பிரிவு 17 இன் படி, ஒரு நிறுவனம் அதன் அகவிதிகளில் குறிக்கோள் வாசகங்களை கூறியிருந்தால், அது அவற்றிற்கு இணங்க செயற்பட வேண்டும். இருப்பினும், ஒரு நடவடிக்கை, ஒப்பந்தம் அல்லது சொத்து பரிமாற்றம் கூறப்பட்ட குறிக்கோள் வாசகங்களை மீறியுள்ளது என்ற தனியொரு காரணத்துக்காக அது செல்லுபடியற்றதாகிவிடாது. அதற்கு பதிலாக, அத்தகைய மீறல் இயக்குநர்களின் கடமைகளின் மீறலாக நோக்கப்படலாம்.

***(03 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 10 – வணிகச் சூழல் தொடர்பான குற்றங்கள்***

**(a)**

**வர்த்தக நாமம்**

ஒரு நிறுவனத்தின் பொருட்களை இன்னொரு நிறுவனத்தின் பொருட்களுடன் வேறுபடுத்திக் காட்டும் எந்தவொரு அடையாளம், சொல், சின்னங்கள், சாதனங்கள், வண்ணங்கள், வடிவங்கள் அல்லது இவற்றின் சேர்க்கை "வர்த்தகநாமம்" என்று வரையறுக்கப்படலாம். ஒ ருவர்த்தக நாமத்தின் பதிவு ஆரம்பத்தில் அதன் பதிவுக்கான விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து 10 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும், மேலும் அதைப் புதுப்பிக்க முடியும்.

**காப்புரிமை (ஆக்கவுரிமை)**

ஒரு புத்தாக்கம் செய்வோன் அதன் பதிவுக்கான விண்ணப்ப நாளிலிருந்து 20 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் காப்புரிமையைப் பெறுவான். காப்புரிமை பெற்ற பின் கண்டுபிடிப்பை உருவாக்குதல், பயன்படுத்துதல் மற்றும் விற்பனை செய்வதிலிருந்து ஏனையவர்களை விலக்குவதற்கு அரசால் கண்டுபிடிப்பாளருக்கு வழங்கப்பட்ட ஏகபோக உரிமை காப்புரிமை என்று அழைக்கப்படுகிறது. 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலைமைச்சொத்து சட்டத்தின் பிரிவு 62 இன் படி, ஒரு கண்டுபிடிப்பு "தொழிநுட்பத் துறையில் ஒரு குறிப்பிட்டதோர் பிரச்சினைக்கு

நடைமுறையில் தீர்வு காண அனுமதிக்கும் ஒரு கண்டுபிடிப்பாளரின் சிந்தனை" என்று காப்புரிமை வரையறுக்கப்படுகிறது.

***(04 புள்ளிகள்)***

**(b)**

2003 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க புலமைச் சொத்து சட்டத்தின் கீழ், ஹப்புத்தளை தேயிலை உற்பத்தியாளர்கள் "ஹப்புத்தளை-தேயிலை" என்ற பெயரைப் பாதுகாக்க முடியும். இது புவியியல் குறியீடுகளை (GIs) ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து உருவாகும் பொருட்களை அடையாளம் காணும் அடையாளங்களாக அங்கீகரிப்பதுடன், அந்த தோற்றத்துடன் தொடர்புடைய குணங்கள் அல்லது நற்பெயரைக் கொண்டுள்ளது. ஹப்புத்தளை-தேயிலையின் தனித்துவமான சுவை பிராந்தியத்தின் குறிப்பிட்ட காலநிலை, மண் மற்றும் பாரம்பரிய உற்பத்தி முறைகளிலிருந்து எழுகிறது, இது புவியியல் பாதுகாப்புக்கு தகுதியுடையதாக அமைகிறது. தேசிய புலமைச் சொத்துரிமை அலுவலகத்தில் "ஹப்புத்தளை-தேயிலையை" புவியியல் அடையாளமாகப் பதிவு செய்வதன் மூலம், உற்பத்தியாளர்கள் பெயருக்கான பிரத்யேக உரிமைகளைப் பெறலாம் மற்றும் பிராந்தியத்திற்கு வெளியே உள்ளவர்கள் அதைப் பயன்படுத்துவதைத் தடுக்கலாம்.

பதிவுசெய்தவுடன் அல்லது பதிவு செய்வதற்கு முன்பே, ஹப்புத்தளை உற்பத்தியாளர்கள் காலி தேயிலை உற்பத்தியாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம், ஏனெனில் அவர் பெயரை தவறாகப் பயன்படுத்துவது தேயிலையின் தோற்றம் குறித்து பொதுமக்களை தவறாக வழிநடத்துகிறது, இது நியாயமற்ற போட்டி மற்றும் தவறான பிரதிநிதித்துவத்திற்கு சமமானது ஆகும்.

***(06 புள்ளிகள்)***

***(மொத்தம் 10 புள்ளிகள்)***

| ***B பகுதி முடிவு*** |
|---|

aat SRI LANKA

**பகுதி -C**

## *வினா 07 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

***அத்தியாயம் 02 – ஒப்பந்தச் சட்டம்***

**(A)**

***(a)***

ஒரு செல்லுபடியாகும் ஒப்பந்தமானது, பிற கூறுகளுடன், சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கொடைமுனைவு மற்றும் ஏற்பினை அவசியமாக்குகிறது. ஒரு கொடைமுனைவு என்பது குறிப்பிட்ட விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு, அது வழங்கப்படுபவர் ஏற்றுக்கொண்டவுடன் அது பிணைக்கப்படும் என்ற நோக்கத்துடன் செய்யப்படும் ஒரு திட்டவட்டமான வாக்குறுதியாகும். இதற்கு நேர்மாறாக, உபசரிப்புக்கான அழைப்பு என்பது மற்றவர்களை கொடைமுனைவை வழங்க அழைக்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கான விருப்பத்தின் வெளிப்பாடாகும். இது ஒரு பிணைப்புமிக்க வாக்குறுதியாக இல்லாதிருப்பதுடன், அதை சுதந்திரமாக ஏற்றுக்கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். விளம்பரங்கள், கடைகளில் காட்டப்படும் பொருட்கள் அல்லது பட்டியல்களில் காட்டப்படும் பொருட்கள் போன்ற உபசரிப்புக்கான அழைப்புகளின் பல பொதுவான எடுத்துக்காட்டுகளை சட்டம் அங்கீகரிக்கிறது. இந்தக் கொள்கை, **பார்மாசூட்டிகல் சொசைட்டி ஆ.்.ப் கிரேட் பிரிட்டன் எ. பூட்ஸ் கேஷ் கெமிஸ்ட்ஸ்** ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளது, அங்கு அலமாரிகளில் உள்ள பொருட்கள் உபசரிப்புக்கான அழைப்பாகக் கருதப்பட்டன, மேலும் **ஃபிஷர் எ. பெல்** வழக்கில், கடை ஜன்னலில் ஒரு ஃப்ளிக் கத்தியைக் காண்பிப்பது ஒரு கொடைமுனைவு அல்ல.

இந்த வழக்கில், விளம்பரக் கடையில் ABC மியூசிக் சென்டரால் காட்சிப்படுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட பதிப்பு இறுவட்டுகள் உபசரிப்புக்கான அழைப்பாக மட்டுமே இருக்கும், அவை கிடைக்கக்கூடும் என்பதைக் குறிக்கிறது, ஆனால் அவை விற்பனைக்கான கொடைமுனைவாக இருக்காது. ஹாசினி ஒரு இறுவட்டினைக் கொள்வனவு செய்யக் கடையை அணுகியபோது, குறிப்பிட்ட விலையில் வாங்குவதற்கான வாய்ப்பை வழங்கினார். இறுவட்டுகள் விற்பனைக்கு அல்ல, காட்சிப்படுத்தல் நோக்கங்களுக்காக மட்டுமே என்று விளக்கி, கடை ஊழியர்கள் மறுத்துவிட்டனர். ஹாசினியின் கொடைமுனைவை ஏற்றுக்கொள்ளாததால், எந்த பிரதிபயனும் பரிமாற்றப்படாததுடன், பரஸ்பர இணக்கம் இன்மையால், ஒப்பந்தத்தின் அத்தியாவசிய கூறுகள் காணப்படவில்லை. எனவே, ஹாசினிக்கும் ABC மியூசிக் சென்டருக்கும் இடையே எந்த செல்லுபடியாகும் ஒப்பந்தமும் ஏற்படவில்லை.

***(04 புள்ளிகள்)***

***(b)***

இந்த சூழ்நிலையில், தனுகாவும் ஹாசினியும் இசை நிகழ்ச்சிக்கான டிக்கெட்டுகளை வாங்கியவுடன் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுடன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தில் ஒரு விலக்கு வாசகம் காணப்பட்டு இருந்தது, அதில் கூறப்பட்டுள்ளதாவது:

“நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மைதானத்திற்குள்ளே ஏதேனும் இழப்பு, திருட்டு அல்லது தனிப்பட்ட உடைமைகளுக்கு சேதம் ஏற்பட்டால் பொறுப்பேற்க மாட்டார்கள்.”

**<u>தொலைந்த கைத்தொலைபேசி (ஹாசினி)</u>**

விலக்கு வாசகங்களின் செல்லுபடியாகும் தன்மையானது, ஒரு ஒப்பந்தத்தில் நுழையும் போது அவை தரப்பினருக்குத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டதா என்பதைப் பொறுத்த துஆகும். **ஓலி**

**எதிர் மார்ல்பரோ நீதிமன்றத்தில் (1949),** நீதிமன்றம் ஒரு விலக்கு விதி ஒப்பந்தத்திற்கு முன்போ அல்லது ஒப்பந்தத்தின் போதாவது தெரிவிக்கப்பட வேண்டும் என்று கூறியது. ஒப்பந்தம் உருவாக்கப்பட்ட பிறகு அது அறிமுகப்படுத்தப்பட்டால், அது பொருந்தாது.

இந்த வழக்கில், விலக்கு வாசகம் கச்சேரி டிக்கெட்டுகளில் அச்சிடப்பட்டு, தினுகாவும் ஹாசினியும் அரங்கத்திற்குள் நுழைவதற்கு முன்பு நுழைவாயிலில் காட்சிப்படுத்தப்பட்டது. ஹாசினியின் கைத்தொலைபேசி அரங்கிற்குள் தொலைந்து போனதால், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் விலக்கு பிரிவின் கீழ் பாதுகாக்கப்படுகிறார்கள், மேலும் அவர்களிடமிருந்து இழப்பீடு கோர முடியாது.

**தினுகாவின் காருக்கும் திருடப்பட்ட மடிக்கணினிக்குமான இழப்பீடு**

தினுகாவும் ஹாசினியும் வந்தபோது, ஒரு வாகனங்கள் நிறுத்துமிட உதவியாளர் அவர்களை நிறுத்துமாறு கூறியதுடன், ஆனால் திருட்டு அல்லது வாகன சேதத்திற்கு ஏற்பாட்டாளர்கள் பொறுப்பேற்மாட்டார்கள் என்று அவர்களிடம் தெரிவித்தார். இந்த வாய்மொழிமூல பொறுப்புத் துறப்பு காரை நிறுத்துவதற்கு முன்பு தெரிவிக்கப்பட்ட விலக்கு விதியாகும்.

இந்த வாசகம் முன்கூட்டியே தெளிவாகத் தெரிவிக்கப்பட்டதால், தினுகாவின் மடிக்கணினி திருடப்பட்டதற்கும் அவரது காருக்கு ஏற்பட்ட சேதத்திற்கும் நிகழ்வு ஏற்பாட்டாளர்களைப் பொறுப்பாக்க முடியாது.

எனவே, தினுகாவுக்கும் ஹாசினிக்கும் நிகழ்வு ஏற்பாட்டாளர்கள் மீது அவர்களின் இழந்த உடைமைகளுக்கு எந்த சட்டப்பூர்வ உரிமையும் இல்லை.

***(07 புள்ளிகள்)***

**(c)**

முதலாவதாக, இழப்பு அல்லது திருட்டுக்கான பொறுப்பை விலக்குவதற்காக ஏற்பாட்டாளர்கள் விலக்கு வாசகங்களை அறிமுகப்படுத்தும் இடங்களில், அத்தகைய பிரிவுகள் ஒப்பந்தத்தை உருவாக்கும் முன் அல்லது நேரத்தில் இணைக்கப்பட்டு பார்வையாளர்களின் கவனத்திற்கு தெளிவாகக் கொண்டு வரப்பட்டால் மட்டுமே பயனுறுதி மிக்கதாக இருக்கும். ஓலி எதிர் மார்ல்பரோ நீதிமன்றத்தில் நிறுவப்பட்டபடி, ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு தெரிவிக்கப்படும் ஒரு பிரிவு பிணைக்கப்படாது. கொடுக்கப்பட்ட தரவுகளின் படி, டிக்கெட்டில் உள்ள அறிவிப்பு மற்றும் நுழைவுப் பலகை நுழைவதற்கு முன்பே தெரிவிக்கப்பட்டது, எனவே அவை நிகழ்வை அணுகுவதற்கான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமைகின்றன, இது அரங்கத்திற்குள் இழந்த பொருட்களுக்கான பொறுப்பிலிருந்து ஏற்பாட்டாளர்களைப் பாதுகாக்கும்.

***(04 புள்ளிகள்)***

***அத்தியாயம் 03 – பொருட்களின் விற்பனைச் சட்டம்***

**(B)**

***(a)*** பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ், மாலா மடிக்கணினியை வாங்குவது நோக்கத்திற்கான பொருத்தப்பாடு மற்றும் வணிகத் தரம் குறித்த உள்ளார்ந்தமான நிபந்தனைகளை தெளிவாக மீறுவதாகும்.

நோக்கத்திற்கான பொருத்தப்பாடு தொடர்பான சட்டப்பூர்வ நிபந்தனை, வாங்குபவர் பொருட்கள் எந்த நோக்கத்திற்காக தேவைப்படுகின்றன என்பதை வெளிப்படையாகத் தெரிவித்து, விற்பனையாளரின் திறன் அல்லது சுயதீர்ப்பை நம்பியிருக்கும் இடத்தில், பொருட்கள் அந்த நோக்கத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்குகிறது. பரிந்துரைக்கப்பட்ட

மாதிரி இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது என்ற பிரதிநிதியின் உறுதிமொழியை நம்பி, வரைகலை வடிவமைப்பு மற்றும் காணொளி தொகுப்பாக்கம் என்பவற்றிற்கு உயர் செயல்திறன் கொண்ட மடிக்கணினி தேவை என்று விற்பனை பிரதிநிதியிடம் மாலா தெரிவித்திருந்தார். அடுத்தடுத்த குறைபாடுகளாக மோசமான புலக்காட்சி தெளிவுத்திறன், அடிக்கடி வெப்பமடைதல் மற்றும் இரண்டு வாரங்களுக்குள் மின்கலம் செயலிழப்பு ஆகியவை மடிக்கணினியின் நோக்கமானது தொழில்சார் பயன்பாட்டிற்கு முற்றிலும் தகுதியற்றது என்பதைக் காட்டுகிறது, இது **பால்ட்ரி எ. மார்ஷலில்** உள்ள கொள்கைகளுக்கு இணையாக உள்ளது.

மேலும், பிரிவு 15(2) இன் கீழ், ஒரு வியாபாரியால் விபரிக்கப்பட்டபடி விற்கப்படும் பொருட்கள் வணிக ரீதியாக தரமானதாகவும், சாதாரண நோக்கங்களுக்காக நியாயமான முறையில் பொருந்தக்கூடியதாகவும், நியாயமான காலத்திற்கு நீடித்ததாகவும் இருக்க வேண்டும். மடிக்கணினியின் தொடர்ச்சியான செயலிழப்பு மற்றும் தரமற்ற செயற்திறன் இந்த நிபந்தனையை தெளிவாக மீறுகிறது.

**(b)** மாலா கொள்வனவு செய்த மடிக்கணினி, நோக்கத்திற்கான பொருத்தம் மற்றும் வணிகத் தரம் தொடர்பான உள்ளார்ந்த நிபந்தனைகளை மீறும் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளதால், பொருட்கள் விற்பனை கட்டளைச் சட்டத்தின் கீழ் பல தீர்வுகளுக்கு மாலாவுக்கு உரிமை உண்டு. இவை சட்டத்தின் கீழ் உள்ள நிபந்தனைகள் என்பதால், பொருட்களை நிராகரித்து ஒப்பந்தத்தை நிராகரிக்க மாலாவுக்கு உரிமை உண்டு, இதன் மூலம் கொள்முதல் விலையை முழுமையாக மீட்டெடுக்கலாம். மாறாக, அவர் மடிக்கணினியை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்பட்டால், மீறல் ஒரு உத்தரவாதமாகக் கருதப்படலாம், இதனால் ஏற்பட்ட இழப்புக்கு இழப்பீடு வழங்கப்படலாம்.

*(10 புள்ளிகள்)*

*(மொத்தம் 25 புள்ளிகள்)*

SRI LANKA

***C பகுதி முடிவு***

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*